# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS.No.130/2023** **Date: 05.11.2025**

**PW1**- தண்டபாணி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1 ம் பிரதிவாதி கடந்த 26.05.2022 அன்று கடன் கணக்கு எண் 1770651018429 ல் ரூ.20000/- செலுத்தியுள்ளார் என்றால், சரிதான். அதற்கான செலுத்து ரசீது அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். அதேபோல் 07.09.2022 அன்று ரூ.3000/- செலுத்தியுள்ளார் என்றால், சரிதான். அந்த செலுத்து ரசீது அசல் பி.வா.சா.ஆ.2. மேற்படி தொகைகள் மொத்தம் ரூ.23000 மும் வரவு வைக்கப்பட்டு பிரதிவாதியின் கடன் கணக்கில் கழித்த பின்புதான் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 ம் பிரதிவாதிக்கு இன்று வரை எந்த வேலையும் கிடைக்கவில்லை என்பதால் அவர் தந்தையின் பராமரிப்பில்தான் இருந்து வருகிறார் என்றால், சரிதான். கடன் விண்ணப்பங்களில் பூர்த்தி செய்யப்படாமலேயே பிரதிவாதிகளிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டோம் என்றால், சரியல்ல. வட்டியை தவறாக கணக்கிட்டு தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

ஒப்பம்/-தண்டபாணி

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சங்ககரி.